

சட்டப்பேரவைத் தேர்தலுக்கான கழகப் பிரச்சார பாடல் ஒலிப்பேழை, கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவைச் செயலாளர் கலைமாமணி டாக்டர் இறையன்பன் குத்தூஸ் பாடி ஆசிப் இறையன்பன் இசை அமைப்பில் – கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணைச் செயலாளர் எம்.எஸ். ஹரிபாபு தயாரிப்பில் உருவாகியுள்ளது. அதனை கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார். கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை துணைத் தலைவர் நடிகர் போஸ் வெங்கட ஆகியோர் அப்போது உடன் இருந்தனர்.

# இரண்டாவது முறையாக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சி தொடர மக்கள் விருப்பம்!

## காளையார் கோவில் பரப்புரைக் கூட்டத்தில் ஓ.பன்னீர்செல்வம் பேச்சு! கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை!

சிவகங்கை, மார்ச் 22 –

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ‘தமிழ்நாடு தலை குனியாது’ என்ற தலைப்பில் தென் மாவட்டங்களில் பொதுக் கூட்டங்களில் பேசிவருகிறார்.

அதன் தொடர்ச்சியாக சிவகங்கை சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட காளையார்கோவிலில் தனியார் மகாலில் ‘தமிழ் நாடு தலை குனியாது’ ஸ்டாலின் ஆட்சி தொடரட்டும் என்ற தலைப்பில் பரப்புரை கூட்டம் மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் நடை பெற்றது. மாவட்டக் கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் வரவேற்று பேசினார். கூட்டத்தில் முன் னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு பேசிய தாவது:–

40 ஆண்டுகளுக்கு மேலாக அ.தி.மு.க.வில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு விசுவாசமாக கட்சிப் பணியாற்றி முதல்வர் பணியாற்றி வந்தேன். கட்சிக்கு விசுவாசமாக தொண்டர்களை அரவணைத்து சென்றேன். முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி துரோகத்தால் இன்று அ.தி.மு.க . சிதறி கிடக்கிறது.

கட்சிக்காக உழைத்தவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளார் கள். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். உருவாக்கிய முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவால் வளர்க்கப்பட்ட கட்சி மிகவும் வளர்ச்சி குன்றி போய்க் கொண்டிருக்கிறது. பா.ஜ.க.விடம் அ.தி.மு.க.வை எடப்பாடி பழனிச்சாமி அடகு வைத்து விட்டார். இந்த கட்சிக்கும், முதல்வர் புரட்சித்தலைவர் வளர்த்த கட்சிக்கு துரோகம் செய்துவிட்டார். துரோகி என்றால் அது எடப்பாடி பழனிச்சாமி என்று அனைத்து மக்களுக்கும் தெரிந்து விட்டது. புரட்சி தலைவர் எம்.ஜி. ஆரால் உருவாகி முதல்வர் முன்னாள் முதல்வர் ஜெயல லிதா தலைமையில் இயங்கிய அ.தி.மு.க. 100 ஆண்டுக ளுக்கு மேலாக இந்த கட்சி இருக்கும் என்று கூறினார்கள். ஆனால் இன்று. எடப்பாடி பழனிச்சாமி செயலினால் கொஞ் சம் கொஞ்சமாக கரைந்து வருகிறது. அ.தி.மு.க.வில் உள்ள யாருக்கும் தெரியாமல் டெல்லியில் பா.ஜ.க. விடம் எடப்பாடி பழனிச்சாமி இந்த கட்சியினை அடகு வைத்து விட்டார். அ.தி.மு.க.வின் தலைமை சென்னையில் கிடையாது. டெல் லியில் உள்ளது. பா.ஜ.க., அ.தி.மு.க.வை இயக்குகிறது.

பா.ஜ.க. என்ன சொல்கிறார்களோ அதை நிறைவேற்றும் முதல் ஆளாக எடப்பாடி பழனிச்சாமி இருந்து வருகிறார். அ.தி.மு.க.வில் இரண்டாம் கட்ட தலைவர்கள் வேறு வழி யின்றி அவர்கள் கட்சியில் உள்ளார்கள். வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் நல்லாட்சி நடத்தி வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சி தொடர வேண்டும். அதற்காக நான் தென் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகி றேன். நான் செல்லும் இடங்கள் ஐந்தாண்டு கால சிறப்பான ஆட்சி நடத்தி வரும் முதல்வர் ஸ்டாலினுக்கு மக்கள் ஆதரவு பெருகி வருகிறது. இதை நான் செல்லும் இடங்களில் காண் கிறேன். ஐந்து ஆண்டுகளில் குறிப்பாக பெண்களுக்கு பல் வேறு நலத்திட்டங்களை முதல்வர் அவர்கள் செயல்படுத்தி வெற்றி அடைந்துள்ளார். ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி தமிழ்நாட் டிற்கு நிதிதருவதில்லை. தளபதி தலைமையிலான ஆட் சியை வஞ்சித்து வருகிறது. அதையெல்லாம் மீறி முதல்வர் ஸ்டாலின் அவர்கள் இந்த ஆட்சியினை திறம்பட நடத்தி வருகிறார்.

இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. நம்பர் ஒன் முதல்வராக தளபதி ஸ்டாலின் அவர் கள் விளங்கி வருகிறார். நான் நீண்ட யோசனைக்கு பிறகு அண்ணா உருவாக்கிய தாய் கழகமான தி.மு.க.வில் இணைந்து உள்ளேன். என்னை கழகத்தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் தாய் உள்ளத்துடன் வரவேற்றார். என்னை அரவணைத்து கட்சியில் இணைத்துக் கொண்டார். என்னு டன் ஏராளமான தொண்டர்கள் கட்சியில் இணைந்தார்கள். அவர்களையும் அன்புடன் வரவேற்றார். தொடர்ந்து அ. தி.மு.க.விலிருந்து விலகி தாய்க்கழகமான தி.மு.க.வில் இணைய உள்ளார்கள். 2026 தேர்தலுக்கு பிறகு அ.தி.மு.க. என்ற கட்சி காணாமல் போய்விடும். பா.ஜ.க. அதைச்செய் துவிடும். தமிழகத்தின் உரிமைக்காக தமிழ்நாட்டின் வளர்ச் சிக்காக அயராது முதல்வர் மு.க ஸ்டாலின் அவர்கள் அய ராது பாடுபட்டு வருகிறார். தமிழர்களின் உரிமைக்காக முதல் ஆளாக குரல் கொடுத்து வருகிறார்.அத்தகைய தமிழர்கள் தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கு அயராது பணியாற்றும் தளபதி அவர்கள் இரண்டாவது முறையாக முதல்வராக ஆட்சியில் அமர வேண்டும். ஏழாவது முறையாக தி.மு.க. ஆட்சிஅ மைய வேண்டும். இதற்காக நான் தமிழ்நாடு முழுவதும் சுற் றுப்பயணம் செய்து மக்களை சந்தித்து வருகிறேன். மக்களி டம் இந்த ஆட்சி தொடர வேண்டும் என்ற எண்ணத்தை நான் நேரடியாக காண்கிறேன். இதற்கு சிவகங்கை மாவட்ட மக்களாகிய நீங்களும் ஆதரவு தர வேண்டும். இவ்வாறு ஓ.பன்னீர்செல்வம் பேசினார்.

இந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், முன்னாள் எம்.பி.க்கள் கோபாலகிருஷ்ணன், ஓ.பி.எஸ். ரவீந்திரநாத், முன்னாள் எம்.எல்.ஏ. ஐயப்பன், காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் பச்சேரி சுந்தரராஜன், மாவட்ட கழக துணைச் செயலாளர் திருமதி ஜோன்ஸ்ருசோ,கல்லல் கே ஆர்.அசோகன் ஆகியோர் பேசினார்கள்.

இந்த கூட்டத்தில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் யோக கிருஷ்ண குமார், வே.ஆரோக்கியசாமி, ஆர்.எம்.கென்னடி, நா.நெடுஞ்செழியன், எம்.ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், அ.முத்துச்சாமி, பெ.மந்த காளை, சிவ கங்கை நகர் கழக செயலாளர் சி.எம்.துரை.ஆனந்த், பேரூர் கழகச் செயலாளர் ஜெயராமன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், நிர்வாகிகள் மார்க்ரெட் கமலா, எஸ்தர் மேரி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், ஒன்றிய துணைச் செயலா ளர் எஸ்.முத்துகுமார், நிர்வாகிகள் வரதராஜன், இலக்கிய அணி அழகையா, இளங்கோ, இளைஞரணி மோகன்ராஜ், ஆர்.வி. எஸ்.அரங்கநாதன், ஆர்.கோதண்டபாணி, தோக் கப்பன். இலக்கிய அணி துணை அமைப்பாளர் குரு. போஸ், கண்ணதாசன் மற்றும் ஒன்றிய, பேரூர், நகர் கழக நிர்வாகி கள் கலந்து கொண்டார்கள்.

# நோ எண்ட்ரி




2014ல் ஒரே ஒரு தொகுதியாக
கன்னியாகுமரியில் மட்டுமே
வென்ற பா.ஜ.க.

2019 மற்றும்
2024 ஆகிய தேர்தல்களில்
ஒரு தொகுதியில் கூட
அக் கட்சி
வென்றதில்லை.

ஆக
நாட்டின் ராஜ்ஜியத்தை
ஆளுகிற கட்சிக்கு தமிழ்நாட்டில்
பூஜ்யம் தான் என்கிற
அவமானத்தால்
தலை குனிந்து நிற்கும்
தாமரைக் கட்சி
எடப்பாடியை பினாமியாக வைத்து
தமிழ் மண்ணையும்
தமிழக மக்களையும்
அடக்கி ஆளப் பார்க்கிறது.

இது தனக்கு வாடகைக்கு
தர மறுக்கும் கடையை
வேறு ஒருவரை வைத்து
தன்வசப்படுத்தி
நினைத்ததை
அடைய முயற்சிக்கும்
சூழ்ச்சியிலான
மூர்க்கத்தனமாகும்..

இதனை அறிவார்ந்த
தமிழ் மக்கள் முறியடித்து
பா.ஜ.க.வின் முகத்தில்
கரிபூசக் காத்திருக்கிறார்கள்..

ஆக தனியாக வந்தாலும்
அணியாக வந்தாலும்
தமிழ்நாட்டில் பா.ஜ.க.வுக்கு
அனுமதி இல்லை
என்பதே நிலை..

**என்னநாஞ் சொல்றது!**



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*

